**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**CC.No.48/2022** **DATE : 11.09.2023**

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| Name | : காயத்ரி | Father's Name | : சரவணன் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : அ.புதுார் | Calling | : - |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.புதுார் கிராமம், கல்லாங்காட்டுர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது அரசு வேலைக்காக வீட்டில் இருந்து படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02-06-2021 ம் தேதி, காலை 09.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான நிலத்தில் எதிரிகளுக்கு சொந்தமான மேய்ந்து கொண்டிருந்த கோழி, ஆடுகளை விரட்ட நானும், எனது தங்கை அம்சவள்ளியும் சென்றபோது ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து தேவடியாங்களா எதற்கு காட்டிற்கு வருகிறீர்கள், எங்க கோழிகளை விரட்டுவீர்களா, குடும்பத்துடன் கொன்றுவிடுவோம் என ஆபாச வார்த்தையால் திட்டி, மிரட்டி, எதிரிகள் என்னை பிடித்து கீழே தள்ளி 2 ம் எதிரி என்னை வலது பக்க தோள்பட்டையில் கோலால் அடித்தும், அதனை தடுக்க வந்த எனது தங்கை அம்சவள்ளியை 2 ம் எதிரி தலைமுடியை பிடித்து கீழே தள்ளி கோலால் இடது பக்க கால் முட்டியில் அடித்து காயப்படுத்தினார்.

2) மேலும், இனிமேல் காட்டுப்பக்கம் வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து மிரட்டினார்கள். காயமடைந்த நாங்கள் எடப்பாடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றோம். அப்போது, கொரானா காலக்கட்டம் என்பதால் எங்களை உள்நோயாளியாக அனுமதிக்காமல் வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தார்கள். சம்பவம் தொடர்பாக நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை.

Witness (Sd)-Gayathri

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No.48/2022** **DATE : 11.09.2023**

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| Name | : அம்சவள்ளி | Father's Name | : சரவணன் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : அ.புதுார் | Calling | : College |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.புதுார் கிராமம், கல்லாங்காட்டுர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது Master of Social work முதலாம் ஆண்டு படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02-06-2021 ம் தேதி, காலை 09.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான நிலத்தில் மேய்ந்து கொண்டிருந்த எதிரிகளுக்கு சொந்தமாக கோழி, ஆடுகளை விரட்ட நானும், எனது அக்கா காயத்ரியும் சென்றபோது ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து தேவடியா கண்டாரஓழி எதற்கு காட்டிற்கு வருகிறீர்கள், எங்க கோழிகளை விரட்டுவீர்களா, குடும்பத்துடன் கொன்றுவிடுவோம் என ஆபாச வார்த்தையால் திட்டி, மிரட்டி, 1 ம் எதிரி மற்றும் 2 ம் எதிரி கோல்களால் என்னை வலது கையிலும், தலையிலும் அடித்து, 1 ம் எதிரி எனது முடியை பிடித்து கீழே தள்ளி எட்டி உதைத்தனர்.

2) மேலும், எனது அக்கா காயத்ரியை 2 ம் எதிரி ஆடு மேய்க்க பயன்படுத்தும் கோலை வைத்து வலது கையில் அடித்து காயப்படுத்தினார். மேலும், இனிமேல் காட்டுப்பக்கம் வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து மிரட்டினார்கள். காயமடைந்த நாங்கள் எடப்பாடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றோம். அப்போது, கொரானா காலக்கட்டம் என்பதால் எங்களை உள்நோயாளியாக அனுமதிக்காமல் வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தார்கள். இது தொடர்பாக நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் எனது அக்கா அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை.

Witness (Sd)-Amsavalli

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**CC.No.48/2022** **DATE : 11.09.2023**

அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| Name | : ராதா | Husband's Name | : சரவணன் |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : அ.புதுார் | Calling | : விவசாயம் |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.09.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், அ.புதுார் கிராமம், கல்லாங்காட்டுர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது மகள்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02-06-2021 ம் தேதி, காலை 09.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான நிலத்தில் மேய்ந்து கொண்டிருந்த எதிரிகளுக்கு சொந்தமாக கோழி, ஆடுகளை விரட்ட எனது மகள்கள் சென்றபோது ஆஜர் எதிரிகள் எனது மகள்களை பார்த்து தேவடியா கண்டாரஓழி எதற்கு காட்டிற்கு வருகிறீர்கள், எங்க கோழிகளை விரட்டுவீர்களா, குடும்பத்துடன் கொன்றுவிடுவோம் என ஆபாச வார்த்தையால் திட்டி, மிரட்டி, 2 ம் எதிரி அ.சா.1 ஐ ஆடு மேய்க்க பயன்படுத்தப்படும் கோலை வைத்து வலது கையில் அடித்து காயப்படுத்தி, அதனை தடுக்க சென்ற அ.சா.2 ஐ 2 ம் எதிரி தலைமுடியை பிடித்து கீழே தள்ளி வலது கால் முட்டியில் அடித்து காயப்படுத்தினார்.

2) நான் சம்பவத்தை பார்த்து கொண்டே எனது மகள்களை காப்பாற்ற சென்றுகொண்டிருக்கும்போதே, மேலும், இனிமேல் காட்டுப்பக்கம் வந்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று ஆஜர் எதிரிகள் எனது மகள்களை பார்த்து மிரட்டிவிட்டு சென்றுவிட்டனர். காயமடைந்த எனது மகள்களை நான் எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். அப்போது, கொரானா காலக்கட்டம் என்பதால் அப்போது எனது மகள்களுக்கு உள்நோயாளியாக அனுமதிக்காமல் வெளிநோயாளியாக சிகிச்சை அளித்தார்கள். இது தொடர்பாக அ.சா.1 மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை.

Witness (Sd)-Radha

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.